**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**IM00 இகரம்**

**எழுத்துத்தேர்வு**

**நேரம்: 2 : 00 மணித்துளிகள்** **மதிப்பெண்: 100**

**I. பின்வரும் தொடர்களைச் சரியா தவறா என்று குறிப்பிடுக.** **[10x1=10]**

1) தறியில் ஆடை நெய்பவர் குயவர். [சரி/தவறு]
2) பழங்காலத் தமிழ் இலக்கியங்கள் ஓலைச்சுவடியில் எழுதப்பட்டு இருந்தன. [சரி/தவறு]
3) ஹெலன் கெல்லர் அமெரிக்காவின் புகழ்பெற்ற எழுத்தாளர்களுள் ஒருவர். [சரி/தவறு]
4) நீராவி இயந்திரத்தின் மூலம் தொழிற்புரட்சியை ஏற்படுத்தியவர் கலீலியோ கலீலி. [சரி/தவறு]
5) அழியாத செல்வமாக இருப்பது கல்வி. [சரி/தவறு]
6) குகை ஓவியத்திற்குச் சித்தன்னவாசல் புகழ்பெற்றது. [சரி/தவறு]
7) நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உழவுத்தொழில் உதவாது. [சரி/தவறு]
8) மனிதவாழ்வில் புரட்சியை ஏற்படுத்திய கருவி சக்கரம். [சரி/தவறு]
9) நவீன ஆங்கில இலக்கியத்தின் தந்தை ஷேக்ஸ்பியர். [சரி/தவறு]
10) 'பறை' இசைக்கருவியைத் 'தப்பு' என்றும் கூறுவர். [சரி/தவறு]

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **[5x2=10]**

1. சிறுதுளி ________________________________.
2. கணினியின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ________________________.
3. உலக உணவு நாள் ______________________ அன்று கடைபிடிக்கப்படுகிறது.
4. கர்மவீரர் என்று அழைக்கப்படுபவர் ________________________________.
5. குற்றாலமலையைச் சிறப்பித்துக் கூறும் இலக்கியம் ____________________.

**III. கீழ்க்காணும் பகுதியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

**[5x2=10]**

என் பெயர் பழனி. நான் மின்சாரத்துறையில் பணியாற்றுகிறேன். என் மனைவியின் பெயர் மாலதி. அவர் ஒரு பேராசிரியை. எங்கள் குடும்பம் சிறியது. எங்கள் குடும்பத்தில் நான், என் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் இருக்கின்றோம். என் மகன் பெயர் பாண்டியன்; மகள் பெயர் அரும்பு.

**வினாக்கள்:**

1. பழனி எங்குப் பணியாற்றுகிறார்?
2. பழனியின் மகன் பெயர் என்ன?
3. மாலதி என்ன பணியில் இருக்கிறார்?
4. பழனிக்கு எத்தனை குழந்தைகள்?
5. பழனியின் மகள் பெயர் என்ன?

1. ____________________________________________________

____________________________________________________

2. ____________________________________________________

____________________________________________________

3. ____________________________________________________

____________________________________________________

4. ____________________________________________________

____________________________________________________

5. ____________________________________________________

____________________________________________________

**IV. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச்சொற்களைக் கொடுக்கப்பட்டுள்ள சொற்பட்டியலில் இருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.**
**Select and write the correct English words for the following Tamil words from the list given below.** **[5x2=10]**

**(Computer, Machine, Telescope, Invention, Technology)**

1. தொலைநோக்கி –______________________________
2. தொழில் நுட்பம் –______________________________
3. இயந்திரம் –______________________________
4. கணினி –______________________________
5. கண்டுபிடிப்பு –______________________________

**V. கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை எனப் பிரித்து அட்டவணைப்படுத்துக.**

**[10x1=10]**

**சிறுவன், புலி, நாற்காலி, மரம், வளவன், செல்வி, பறவை, படகு, ஆசிரியர், நண்பன்**

| **வ.எண்.** | **உயர்திணை** | **அஃறிணை** |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

**VI. அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள வினைப்பகுதியிலிருந்து பொருத்தமான பெயரெச்சங்கள்/வினையெச்சங்களை உருவாக்கி கோடிட்ட இடங்களை நிரப்புக.**
**[5x2=10]**

1. வளவன் தேர்வுக்குரிய பாடங்களை _____________ முடித்தான். (படி)
2. வேடனைக் கண்ட மான் _____________ மறைந்தது. (ஓடு)

3. நாட்டிய போட்டியில் நன்றாக _____________ மாதவி பரிசு பெற்றாள். (ஆடு)

4. காலையில் _____________ உழவன் இன்னும் வீடு திரும்பவில்லை. (செல்)

5. பறவைகள் வானில் _____________ சென்றன. (பற)

**VII. கீழ்க்காணும் ஒவ்வொரு குழுவிலும் உள்ள பொருந்தாத சொல்லை எடுத்துக் கோடிட்ட இடத்தில் எழுதுக.** **[5x2=10]**

1) திங்கள், நிலா, மன்னன், கிழமை, மாதம் – _______________

2) கா, காகம், சோலை, வீரன், பூங்கா – _______________

3) அணி, வயல், அழகு, நகை, வரிசை – _______________

4) மா, குதிரை, பெருமை, கடல், மாவு – _______________

5) மரம், மெய், உடல், மெய்யெழுத்து, வாய்மை– _______________

**VIII. கீழ்க்காணும் விளம்பரத்தினைக் கவனமாகப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **[5x2=10]**

இரத்த தான முகாம்



**வினாக்கள் :**

1. 'உலக இரத்த தான நாள்' என்று கடைப்பிடிக்கப்படுகிறது?
2. ஆண்கள் எத்தனை மாதத்திற்கு ஒரு முறை இரத்த தானம் செய்யலாம்?
3. சுவரொட்டியில் காணும் பொன்மொழி ஒன்றினை எழுதுக.
4. இரத்த தான முகாம் எங்கே நடைபெறுகிறது?
5. பெண்கள் எத்தனை மாதத்திற்கு ஒரு முறை இரத்த தானம் செய்யலாம்?

1. _______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

2. _______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

3. _______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

4. _______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

5. _______________________________________________________

_______________________________________________________

_______________________________________________________

IX. அடைப்புக்குள்ளிருந்து சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்துத் திருக்குறளை நிறைவு செய்க. [5x2=10]

1. தோன்றின் ____________________ தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று. (புகழோடு / இகழோடு)

2. பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்

சால __________ __________பெயின். (மிகுத்துப் / குறைத்துப்)

3. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே ____________________ நன்று. (நினைப்பது /மறப்பது)

4. நகையும் உவகையும் ____________________ சினத்தின்

பகையும் உளவோ பிற. (வெல்லும் / கொல்லும்)

5. சொல்லுக சொல்லில் பயனுடைய ____________________

சொல்லில் பயனிலாச் சொல். (சொல்லற்க / நில்லற்க)

X. முறை மாறியுள்ள தொடர்களைச் சரியான வரிசையில் அமைக்க.

Rearrange the following sentences to make a meaningful passage. [5x2=10]

1. இதன்மூலம் பாரியின் வள்ளல் தன்மையை அறியலாம்.
2. அந்தக் கொடி படர்வதற்கு உடனே தம் தேரைத் தந்தார்.
3. ஒருநாள் பாரி, தம் தேரில் மலைப்பாதை வழியாகச் சென்றார்.
4. அதற்காக மனம் வருந்தினார்.
5. அங்குப் படர்வதற்குக் கொம்பின்றி அசைந்த கொடியைக் கண்டார்.

____________________________________________________

____________________________________________________